ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | பிப்ரவரி 2000 | கானம் : 7





மேலே : ஸமீபத்தில், மும்பை மாதுங்காவில் சௌத் இந்தியன் பஜன் ஸமாஜத்தில் ஸ்ரீ மஹாபெரியவாளுக்கு சால்வைகளினால் ஸ்ரீ ஸ்வாமிகள் அர்ச்சனை செய்கிறார்.

கீழே : ஸ்ரீ ஸ்வாமிகள், சௌத் இந்தியன் பஜன் ஸமாஜத்தில் ப்ரஸ்த்தானத்ரய பாஷ்ய பாராயண வித்வத் ஸதஸ் ஏற்பாடு செய்த ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களை கௌரவிக்கிறார்கள்.

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

**(தெய்வீக மாதப் பத்திரிகை)**

வேணு : 5 பிப்ரவரி 2000 கானம் : 7

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 51 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 33 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 21 | 10 |
| 6. | சைதன்ய மஹாப்ரபு நாமபக்ஷாகேந்த்ரா | 17 |
| 7. | மஹாபாரத கதைகள் | 18 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 27 | 25 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 54 | 26 |
| 10. | செய்திகள் | 30 |
| 11. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 30 |
| 12. | நாமஸங்கீர்த்தனம் | 31 |



ஸமீபத்தில், மும்பையில் நடைபெற்ற ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸில்
ஸ்ரீ ஸ்வாமிகளும் கலந்து கொண்ட வித்வான்களும்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : தர்பார் தாளம் : சாபு

## பல்லவி

பஶ்யத ராதாம் பன்னக தீர்கவேணீம்
பஶ்யத க்ருஷ்ணம் தீர்கவேணீதர (பஶ்யத)

## சரணங்கள்

பஶ்யத ராதாம் நிகுஞ்ச நிவாஸிநீம்
பஶ்யத க்ருஷ்ணம் குஞ்ஜமாலாதரம் (பஶ்யத)

பஶ்யத ராதாம் ஸகீஜன லாலிதாம்
பஶ்யத க்ருஷ்ணம் ஶுக முனிபூஜிதம் (பஶ்யத)

பஶ்யத ராதாம் கௌரவர்ணீம்
பஶ்யத க்ருஷ்ணம் ஶ்யாமளவர்ணம் (பஶ்யத)

பஶ்யத ராதாம் த்ரைலோக்ய பூஜிதாம்
பஶ்யத க்ருஷ்ணம் த்ரிபங்கிரூபம் (பஶ்யத)

பஶ்யத ராதாம் ப்ரேமஸ்வரூபிணீம்
பஶ்யத க்ருஷ்ணம் கருணாஸ்வரூபம் (பஶ்யத)

To know more about mission activities and satsang events visit : http://members.tripod.com~madhuramurali

The Spiritual Magazine “Madhura Murali” is also available on Web : http://www.madhramurali.org



ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை ஒட்டி நடைபெற்ற
ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத ஜடாபாராயணத்தில்
கலந்து கொண்ட வேத வித்வான்கள்

## மதுரமான மஹனீயர் 51

சென்ற வருடத்திற்கு முதல் வருடம் சீர்காழி ஸமீபத்திலுள்ள அரிமேயவிண்ணகரம் என்ற திவ்யதேசத்திற்கு, நம்முடைய ஸ்வாமிகளின் முயற்சியால் ஸம்ப்ரோக்ஷணம் செய்ததோடு மட்டுமல்லாமல், அங்கு நித்யபடி முறையாக திருவாராதனம் நடக்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. கோவிலில் நந்தவனமும் அமைத்து பராமரிக்கப்பட்டுள்ளது.இதையடுத்து அருகில் உள்ள பள்ளிகொண்ட ரங்கநாதர் கோவிலும் வேலைகள் முடித்து ஸம்ப்ரோக்ஷணத்திற்காக தயாராக உள்ளது. இதை அடுத்து, கோபாலன் கோவில் கொண்டுள்ள காவலம்பாடி திவ்யதேசமும் ஸம்ப்ரோக்ஷணம் கண்டருள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. காவலம்பாடி கோவிலுக்கும் ஒரு தனி பட்டர் ஏற்பாடு செய்து திருவாராதனம் சிரத்தையாக நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை ஒவ்வொரு ஞாயிறன்றும் பல்வேறு க்ருஹங்களில் நடைபெற்று வந்த நாமஸங்கீர்த்தனம், இப்பொழுது ஒவ்வொரு ஞாயிறன்றும் ஹரிஜன வீதிகளில் நடக்க ஏற்பாடு செய்து, பொங்கல் நன்னாள் முதல் நடந்துவருகின்றது. முதலில் சென்னையில் ஆரம்பித்துள்ள இந்த நாம ஸங்கீர்த்தனம் பிறகு தமிழ்நாடு முழுவதும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ப்ரதிவருஷம் நடைபெற்று வந்த ப்ரஸ்தானத்ரயபாஷ்ய பாராயண ஸதஸ், இந்த வருடம், மும்பய், மாதுங்கா, சௌத் இந்தியன் பஜன ஸமாஜத்தில் நடைபெற்றது. மேலும் சென்ற வருடம் சென்னை மயிலாப்பூர் RR சபாவில் நடைபெற்ற நாமஸங்கீர்த்தன ஸப்தாஹம், இந்த வருடம் மார்ச் 5-ந் தேதி முதல் மார்ச் 11-ந் தேதி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. சென்னை வளசரவாக்கத்தில் நடந்து வந்த வேதபாடசாலை, மதுரபுரி ஆஶ்ரம வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கேயே ப்ரேமிகவரதனுக்கு ஆலயமும் உருவாகி வருகின்றது. அங்கு நித்யம் பாகவத ஸப்தாஹம், நாமஸங்கீர்த்தனம், அகண்ட நாமஸங்கீர்த்தனம் போன்றவைகள் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் மூலைமுடுக்கெல்லாம், ‘‘ஹரே ராம ஹரே ராம’’ என்று நாம கோஷம் கேட்க பலவிதத்திலும் நம் ஸ்வாமிகள் ஏற்பாடு செய்து வருகின்றார். மேலும் குருவாயூரில், மே 10-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை பாகவத ஸப்தாஹ ஸதக்ரது நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (தொடரும்) - ஜயந்தி ஜானகிராமன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : சில மாதங்களுக்கு முன் "THE HINDU" ஆங்கில நாளிதழில் துக்கத்தில் இருப்பவர்கள் அனைவரும் சூத்திரர்கள் என்றும் ஸந்தோஷத்தில் இருப்பவர்கள் அனைவரும் ப்ராஹ்மணர்கள் என்றும் ஒரு கட்டுரை வந்தது. மேலும் அந்தக் கட்டுரை, ''அப்படிப் பார்த்தால் இன்று பாரத தேசத்தில் உள்ளவர்கள் அனைவரும் துக்கத்தில் இருப்பதால் அனைவரும் சூத்திரர்கள்தான்'' என்றும் கூறுகின்றது. இதற்குத் தங்கள் பதில் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : உலகத்தில் அஜ்ஞானத்தில் யார் யார் இருக்கின்றார்களோ அவர்கள் அனைவரும் துக்கத்தில் இருப்பவர்கள். அவர்கள் அனைவரும் சூத்திரர்களே. அதுபோல் யார் யாரெல்லாம் ஞானத்தில் லயித்து உள்ளார்களோ அவர்களே ஆனந்தத்தில் இருப்பவர்கள். ஆகவே அவர்கள்தான் ப்ராஹ்மணர்கள். ஆகவே ஞானத்தை அடைந்தவர்கள் அனைவரும் ப்ராஹ்மணர்கள். மற்றவர்கள் அனைவரும் சூத்திரர்கள் என்பதையே இது காட்டுகிறது.

*கேள்வி : ஸமீபத்தில் பாரததேசத்தினுடைய விமானம் கடத்தப்பட்டு அதில் இருந்த பயணிகள் மிகவும் துன்பத்துக்காளானார்கள். நம் தேசத்தில் இத்தனை மஹான்களும், யோகிகளும், இருந்தும் அவர்களைக் காப்பற்ற ஏன் முடியவில்லை?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : தங்களுடைய கேள்வியைப் பார்த்தால் பாரத தேசத்தில் ஏதோ ஒரு துன்பம்தான் நடந்துள்ளதுபோல் கூறுகின்றீர்கள். தீவிரவாதிகளினால் நம் தேசத்தில் பல பாகங்களில் மக்கள் தினமும் அவதிக்குள்ளாகின்றார்கள். ஒரிஸா மாநிலத்தில், ஸமீபத்திய மழையில் பெருத்த சேதம் உண்டானது. தினமும் கொலை, கொள்ளைகள், அநேகம் நடக்கின்றது. தினமும் பலதரப்பட்ட மக்கள் வியாதியினாலும், விபத்துக்களாலும், பசியினாலும் இறக்கின்றார்கள். இதெல்லாம், மஹான்கள் உள்ள நம்நாட்டில்தானே நடக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் மனிதனின் பேராசை, அகங்காரம், ஆளுமை இவைகள்தான்.

***கேள்வி : எனக்கு எப்பொழுதும் யாராவது பாகவதம் சொன்னால் கேட்டுக்கொண்டே இருக்கப்பிடிக்கிறது. ஆனால், என்னால் ஜபம், தியானம் செய்ய முடியவில்லை? என்ன செய்வது?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : பாகவதத்தை கேட்டுக் கொண்டிருந்தாலே போதும். ஶுகர் சொல்ல பரீக்ஷித் பாகவதம் மட்டுமே கேட்டு மோக்ஷம் அடைந்தான் அல்லவா. பரீக்ஷித் எந்த ஜப தியானமும் செய்யவில்லையே. அதுபோல் ப்ரஹ்மராக்ஷஸனான துந்துகாரி என்பவனும் பாகவத ஶ்ரவண மாத்திரத்தில் கரையேறினான். ஆகவே ஶ்ரத்தையாக கதா ஶ்ரவணம் செய்தாலேபோதும்.

***கேள்வி : நேற்றைக்கு ஒருவர் தன்னுடைய ப்ரசங்கத்தில் வேதம் தான் தெய்வம் என்றும் வேதத்தை ரக்ஷிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் மிகவும் அழகாகப் பேசினார்.***

ஸ்ரீ ஸ்வாமிகள் : வேதம் உயர்ந்தது என்றும், வேதம்தான் தெய்வம் என்றும், வேதத்தை ரக்ஷிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் இன்று அநேகர்கள் வீராவேசமாக மேடைகளில் பேசுகின்றார்கள். இது ஒரு Fashion ஆகப் போய்விட்டது. அப்படிப் பேசுபவர்களில் அநேகர், தன்னுடைய பையனை வேத அத்யயனம் செய்ய அனுமதிப்பதில்லை. தன்னுடைய பெண்ணை வேத அத்யயனம் செய்த பையனுக்கு விவாஹம் செய்துகொடுக்க தயாராக இல்லை. இப்படி இருக்கையில் வேதம் உயர்ந்தது என்று மட்டும் பேசுவதால் என்ன பயன். ■

---

ஸ்ரீ ஹரி:

**உதயாஸ்தமன ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவம்**

**தேதி : மே 10-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை**

**ஸம்பூர்ண நாராயணீயம் பாராயணம்**

**தேதி : மே 18-ந் தேதி**

ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில்,
குருவாயூர் மேப்பத்தூர் மண்டபத்தில் நடைபெறும்.

# வேத கதைகள் - 33

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஐதரேயர்

வேதங்கள், மந்த்ரம், ப்ராம்மணம் என்று இருவகையாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன. க்ருஷ்ண யஜுர் வேதத்தைத் தவிர மற்ற வேதங்களில், மந்த்ரபாகங்கள், ப்ராம்மணபாகங்கள் என்று தனித்தனியாகவே இருக்கின்றன. க்ருஷ்ணயஜுர் வேதத்தில் மட்டும் மந்த்ர, ப்ராம்மணங்கள் சேர்க்கை இருக்கின்றன. அதனால்தான் இதற்கு க்ருஷ்ண யஜுர்வேதம் என்று பெயர் ஏற்பட்டிருக்கின்றது. க்ருஷ்ணம் என்றால் கலந்தது என்று பொருள். ரிக் வேதத்தில் ஐதரேய ப்ராம்மணம் என்ற ஒன்று இருக்கிறது. அந்த ஐதரேய ப்ராம்மணத்தில், ''*ஏதத் ஹஸ்மவை தத் வித்வான் மஹிதாஸ ஐதரேய:*'' என்று இருக்கிறது. அந்த ஐதரேயர் ஈஸ்வரானுக்ரஹத்தால் இந்த ப்ராம்மணத்தைக் கண்டுபிடித்தார். அதனால் இதற்கு ஐதரேய ப்ராம்மணம் என்று பெயர் ஏற்பட்டது. இந்த ஐதரேய மஹரிஷியின் வரலாறு விரிவாக கூறப்பட்டருக்கிறது.

ஒரு மஹரிஷிக்கு பல மனைவிகள் இருந்தனர். அவர்களுக்குள் ஒரு மனைவிக்கு இதரா என்று பெயர். அந்த இதரைக்கு மஹிதாஸன் என்ற பிள்ளை இருந்தான். அந்த மஹரிஷிக்கு மற்ற மனைவிகளின் பிள்ளைகளிடத்தில் அதிகமான அன்பு இருந்தது. இதரையினிடத்திலும் அவன் பிள்ளையான மஹிதாஸனிடத்திலும் அவருக்கு சிறிது கூட அன்பு இல்லை.

ஒரு ஸமயம், ஒரு யாகத்திற்கு மஹிதாஸனின் தந்தை மற்ற உடன்பிறந்தாருடன் சென்றிருந்தார். அங்கு யாக ஸபையில் மஹிதாஸனின் தந்தை, மஹிதாஸனை அவமதித்து, மற்ற மனைவிகளின் பிள்ளைகளை தன் பிடியில் அமர்த்திக்கொண்டார். மஹிதாஸனை தன் மடியில் அமர்த்திக் கொள்ளவில்லை. இதனால் மஹிதாஸன் மிகவும் வருத்தமடைந்தான். இதையறிந்த அவன் தாயான இதரையானவள், தன் குல தெய்வமான பூமிதேவியை ஸ்மரித்தாள்.

இதரையின் வேண்டுகோளுக்கு இணங்கி பூமிதேவியும் அழகான உருவத்துடன் யாகசாலையில் தோன்றினாள். மஹிதாஸனுக்கு ஒரு உயர்ந்த ஸிம்மாசனத்தையும் அளித்து மஹிதாஸனை அமரச் செய்தாள். மஹிதாஸனின் ஸஹோதரர்கள் அதிக பாண்டித்யம் நிரம்பியவர்கள். அதையறிந்து இந்த மஹிதாஸனுக்கு இந்த ப்ராம்மணத்தை கண்டுபிடிக்கக் கூடிய வரத்தை அளித்து, அவனுக்கு ஒரு தனிப்பட்ட பெருமையை அளித்தாள். அந்த பூமிதேவியின் அருளால் மஹிதாஸனுக்கு *''அக்னிர்வை தேவானாம் அவம''* என்று தொடங்கி *''ஸ்த்ருனு தே''* வரையிலான 40 அத்தியாயத்தோடு கூடிய இந்த ப்ராம்மணத்தை கண்டுபிடிக்கமுடிந்தது. அதற்கு மேல் *''அதமஹவ்ரதம்''* என்று தொடங்கி, *''ஆசார்ய: ஆசார்ய:''* என்று வரையிலான ஆரண்யகவ்ரதம் என்ற ப்ராம்மணமும் மஹிதாஸனுக்கு தோன்றியது. இவ்விதமே வேதங்களில் ஒவ்வொரு பாகத்தையும் ரிஷிகள் தெய்வத்தின் அருளால் கண்டுபிடித்து நமக்கு அளித்துள்ளனர்.

*''யுகாந்தே அந்தர்ஹிதாந் வேதாந் ஸேதிஹாஸாந் மஹர்ஷய: லேபிரே தபஸாபூர்வம் அனுஜ்ஞாதா: ஸ்வயம்புவ''*. இவ்விதம் வேதங்களில் கூறப்பட்ட விஷயங்களில் ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், பின்பற்றுகின்றன. வேதத்தில் கூறப்பட்டதைப் பின்பற்றுவதால் தான் இவைகளுக்கு பெருமை கிடைக்கின்றன. அவ்விதம் பரிசீலனை செய்யும்பொழுது ஸ்ரீமத்பாகவதத்திலுள்ள த்ருவ சரித்ரமானது இந்த மஹிதாஸனின் கதையை பின்பற்றி வந்திருக்கிறது. இந்த ஐதரேயரால் கண்டு பிடிக்கப்பட்டதால்தான் ''ஐதரேய ப்ராம்மணம்'' என்று பெயர் வந்தது. எல்லா வேதங்களுக்கும் பாஷ்யம் எழுதிய ஸாயனாச்சார்யர் இந்த ப்ராம்மணத்திற்கும் பாஷ்யம் எழுதியிருக்கிறார்.

க்ருஷ்ணயஜுர் வேதத்தில் ப்ராம்மண பாகம் கலந்தே இருப்பதால் ப்ராம்மண பாகத்தை யாவரும் அத்யயனம் செய்கின்றனர். மற்ற வேதங்களில் ப்ராம்மண பாகம் தனியாக இருப்பதால் தற்சமயம் மற்ற வேதங்களில் ப்ராம்மணபாகத்தை அத்யயனம் செய்தவர்களை பார்ப்பது அபூர்வமாக உள்ளது. தற்சமயம் நம் தேசத்திலுள்ள வேதங்களை, மந்த்ரபாகம், ப்ராம்மணபாகம் இவைகளை அத்யயனம் செய்பவர்களுக்கு பலவிதத்திலும் உதவிபுரிந்து, தற்சமயம் இருப்பவைகளையாவது அழியாமல் பாதுகாத்தப் பெருமை ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகளையே சாரும்.

■

# எந்தரோ மஹானுபாவுலு - 21

உடையவரின் சீடர்களில் வடுகநம்பி என்பவரும் ஒருவர். இவரை ஆந்திரபூர்ணர் என்றும் குறிப்பிடுவார்கள். இவர் தெலுங்கு நாட்டிலிருந்து வந்தவர். ராமானுஜரின் அடி நிழலில் வாழ்ந்த சீடர்களில், ராமானுஜரது திருவடிநிலைகளான பாதரக்ஷைகளையே திருவாராதன பெருமானாக மதித்துப் போற்றி வழிபட்டு வந்தவர். ராமானுஜருக்குப் பால் காய்ச்சிக் கொடுக்கும் பணியையும் இவர் மேற்கொண்டிருந்தார்.

வடுகநம்பியும் மற்றைய சீடர்களுடன் ராமானுஜரின் யாத்திரைகளில் தொடர்ந்து செல்வதுண்டு. ஏதாவது ஒரு திருப்பதியை நெருங்கியதும், ராமானுஜர் பாதரக்ஷைகள் இல்லாமல் நடந்தே போவார். அந்தத் திருப்பதியைத் தரிசித்துக் கடந்ததும், பாதரக்ஷைகளை மீண்டும் அணிந்து கொள்வார். அந்த வழக்கப்படி ஒரு ஸமயம் ராமானுஜர் திருவரங்கத்திற்கு வடக்கேயுள்ள திருவெள்ளறை ஸ்தலத்திற்கு தரிசிக்கப் புறப்பட்டுப் போயிருந்தார். அந்தத் தலத்தை நெருங்கியதும் பாதரக்ஷைகளைக் கழற்றினார்.

வடுகநம்பி, உடையவருடைய ஆராதனப் பெருமாளான வரதராஜ விக்கிரகத்துடன் பாதரக்ஷைகளை சேர்த்து ஒன்றாக மூட்டை கட்டுவதை ராமானுஜர் பார்த்துவிட்டார். திகைத்து திக்பிரமை கொண்டவராய், வடுகா இது என்ன செய்தீர்'' என்று கேட்டார். வடுகரோ அமைதியாக, ''தங்கள் தேவரை விட எங்கள் தேவருக்கு வந்த குறை என்னவோ'' என்று விண்ணப்பிக்க மற்ற சீடர்கள் விக்கித்து பிரமித்து நின்றனர். ராமானுஜரும் ஆச்சர்ய பரவசமடைந்தார்.

வடுகநம்பி, ராமானுஜரின் புகழொளி பரவுவதற்கு தக்கதொரு ஸாதனமாக இருந்தார். ராமானுஜருடன் பெருமாளை ஸேவிக்கப் போனாலும், தாம் பெருமாளை ஸேவிக்காமல் ராமானுஜரையே பார்த்துக் கொண்டிருப்பாராம். ஒரு ஸமயம், ராமானுஜர், வடுகநம்பியை நோக்கி ''பவளவாய் கமலச் செங்கண்'' என்ற தொண்டரடிப்பொடியாழ்வார் பாசுரத்தை நினைவூட்டி, ''அந்தக் கமலக் கண்ணழகைப் பார்த்தீரா!'' என்று கூற சீடரோ, ''என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்ற திருப்பாணாழ்வார் பாசுரத்தினாலேயே ராமானுஜருக்கு பதில் சொல்லிவிட்டார்.

ஒரு ஸமயம், வடுகநம்பி ராமானுஜருக்காக பக்குவமாக பால் காய்ச்சிக்கொண்டிருந்தார். உடையவர், தம் மடத்து வாயிலில் நின்று கொண்டு, ''வடுகா ! பெருமாளை ஸேவிக்க வாரும்'' எனக் கூப்பிட்டார். வடுகநம்பியோ, ''உம்முடைய பெருமாளை ஸேவிக்க வந்தால் எம்முடைய பெருமாளுக்குக் காய்ச்சுகிற பால் பொங்கிப்போகுமே'' என்று சொல்லி விட்டார். ராமானுஜரும், ''உமக்குத் தோற்றோம், பன்முறையும் தோற்றோம்'' என்று கூறினாராம்.

இனி சோழ அரசனிடமிருந்து தப்பிக்க ஸ்ரீரங்கத்தை விட்டு கிளம்பிய உடையவரது பயணத்தைப் பற்றி பார்ப்போம். உடையவருடன் நாற்பத்தைந்து பேர் பயணமானார்கள் என்று தெரியவருகிறது. நடந்து நடந்து நீலகிரிச் சாரலில் உள்ள வேடுவர்கள் சேரியை அடைந்தனர். அங்கே, ராமானுஜருடைய சீடரான நல்லான் சக்ரவர்த்தியின் சீடர்களான வேடர்கள் இந்த வைஷ்ணவ கோஷ்டியை வரவேற்று தேனும், தினையும் தந்து உபசரித்தனர். வந்திருப்பது ராமானுஜரது கோஷ்டி என்று அறிந்ததும் உடையவரது திருவடிகளைக் கட்டிக்கொண்டு கதறினர். அன்று இரவு ராமானுஜரும் அந்த சேரியில் தங்கி, மறுநாள் அங்கிருந்து புறப்பட்டார்.

பிறகு மைசூரைச் சேர்ந்த தொண்டனூருக்கு வந்து சேர்ந்தனர். விட்டல தேவராயன் என்ற ஜைன அரசன் அந்த நாட்டுக்கு அதிபதியாக இருந்தான். அவனுடைய மகளுக்குப் பேய் பிடித்திருந்தது. மந்திரவாதிகளாலும், வைத்யர்களாலும் அந்தச் சித்தப் பிரமையைக் குணப்படுத்த முடியவில்லை. அரண்மனையில் உபாதானத்துக்குப் போன ஒரு பாகவதர், அரசியிடம், ''நம் ஆசாரியார் எம்பெருமானார் இந்த ப்ரதேசத்திற்கு வந்திருக்கிறார். அவர் அருளால் அரசகுமாரி சுகம் அடைவாள்'' என்று செய்தி சொன்னார். அது கேட்ட அரசி அரசனிடம் சொல்ல, அவனும், ''புதியவர் நம் புதல்வியைக் குணப்படுத்தினால், அவரே நமக்கு ஆசாரியர்'' என்று கூறிவிட்டான்.

அரசன் ராமானுஜரை அரண்மனைக்கு வரும்படி அழைத்தான். முதலில் ராமானுஜர் ராஜதானியை தாம் மிதிப்பானேன் என்று தயங்கினார். பிறகு தொண்டனூர் நம்பி, ''அரசனுக்கு அருள் புரிவதால் வைஷ்ணவ தர்சனம் வளர இடமுண்டு'' என்று வற்புறுத்த ராமானுஜரும் ஸம்மதித்து, விட்டல தேவனின் அரண்மனைக்குச் சென்றார். அரசனது புதல்வியை உடையவரது ஸ்ரீபாததீர்த்த ப்ரசாதத்தால் குணப்படுத்த, அரசனும் குடும்பத்தினரும் ராமானுஜரது சீடர்களாயினர். விட்டலதேவனுக்கு விஷ்ணுவர்த்தன் என்ற தாஸ்ய நாமத்தை, ராமானுஜர் சூட்டினார்.

பிறகு அந்த ஊரிலிருந்த ஆயிரக்கணக்கான ஜைனர்கள் ராமானுஜருடன் தர்க்கவாதம் செய்ய வந்தனர். அவர்கள் சார்பில் வந்த தூதருக்கு உடையவர் பதில் சொன்னார். ''உங்கள் ஒவ்வொருவருடனும் வாதம் செய்வதானால் வாதம் முடிய பல வருஷங்களாகும். ஆகவே நீங்கள் அனைவரும் மொத்தமாக வாருங்கள்'' என்று கூறி, அதற்காக ஒரு பெரிய மண்டபத்தைக் குறிப்பிட்டு அங்கு பல ஸமணர்களையும் ஒன்று கூட்டினார். பிறகு ஒரு திரைக்குப் பின் சென்றார். சிறிது நேரங்கழித்து, ''உம் கேள்விகளைத் தொடுக்கலாம்'' என்றார். திரைமறைவிலிருந்த யதிராஜரை நோக்கி மண்டபத்தின் மூலை முடுக்குகளிலிருந்தும், பல ஸமணர்கள் ஒரே ஸமயத்தில் கேள்விகளை வீசினார்கள்.

திரைக்குள் சென்றதும், ஆதிசேஷனுடைய அவதாரமான ராமானுஜர் தமது ஆயிரம் நாவினால் ஒரே ஸமயத்தில் அனைவருக்கும் பதில் சொன்னார். கேள்விகள் முடியும் முன்பே பதில்கள் வந்ததைக் கண்டு ஸமணர்கள் ப்ரமித்தார்கள். மேலும், பதில்கள் உஷ்ணமாகவும், உக்கிரமாகவும், பாம்பு சீறுவதைப் போன்ற மூச்சு வருவதையும் கவனித்து ஸமணர்கள் அச்சமும் கொண்டனர்.

ராமானுஜர் அவர்களைப் பார்த்து, ''உங்கள் கேள்விகள் முடிந்து விட்டால் அமைதியுடன் இல்லம் செல்லுங்கள். விருப்பமுள்ளவர்கள் ஶாந்தியையும், முக்தியையும் அளிக்கவல்ல ஸ்ரீவைஷ்ணவ மதத்தைத் தழுவுங்கள். இனி இந்த ராஜ்யத்தில் வேறு மதங்களுக்கு இடமில்லை'' என்றார்.பெரும்பாலோர் ஸ்ரீவைஷ்ணவர்களாகிவிடவே விஷ்ணுவர்த்தன ராஜாவும் மன நிறைவுடனும் நிம்மதியுடனும் காலம் கழித்தான்.

இப்படியிருக்கையில், ஒருநாள் உடையவர் தம்மிடமிருந்த திருமண் செலவழிந்து மிகவும் குறைந்துவிட்டதைக் கண்டு மனம் வருத்தப்பட்டு இரவு ஶயனித்தார். அன்றிரவு பெருமாள் அவருடைய கனவில் தோன்றி, ''யதுகிரியில் திருமண் நிரம்ப உண்டு. உம்மை அங்கு எதிர்பார்த்து நிற்கிறோம்'' என்று அழைக்க, மறுநாளே ராமானுஜர் தமது சீடர்களுடன் யதுகிரிக்குப் புறப்பட்டார். முதல்நாள் மிகவும் பிரயாசைப்பட்டுத் தேடியும் திருமண் குவியலைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அன்றிரவு மறுபடி பெருமாள் ராமானுஜர் கனவில் தோன்றி, ''நாளைக் காலையில் கல்யாணி புஷ்கரணிக்கு அருகில் உள்ள திருத்துழாய் மரத்தின் கீழ் உள்ள புற்றில் நாமிருக்கிறோம். அங்கு திருமண் புற்றும் நிரம்ப உள்ளது'' என்று கூறி மறைந்தார்.

மறுநாள் காலை, உடையவர் எழுந்து, நீராடி, பெருமாள் காட்டிய வழியில் சென்று, செண்பக மரக்கூட்டத்தை அடைந்து அங்குள்ள திருத்துழாய் செடி அடியிலிருந்த புற்றின் அருகில் சென்று மனதில் பெருமாளை தியானம் செய்து நின்றார். பிறகு புற்றை லேசாகத் தம் திருக்கரத்தால் கலைத்தார். அதிலிருந்து திருநாராயணன் தோன்றினார். ராமானுஜர் மன்னருக்கு சேதி அனுப்பினார். விஷ்ணுவர்த்தனும் இந்த அற்புதத்தைக் கண்டான். அரசன் ஆணையால் ஒரு கோவிலை அங்கு எழுப்பி திருநாராயணப்பெருமாளை தமது கைகளாலேயே பிரதிஷ்டை செய்து பெருமாள் கைங்கர்யத்துக்கு ஒரு பட்டரையும் ராமானுஜர் நியமித்தார். பெருமாள் காட்டிய இடத்திலிருந்து திருமண்ணையும் யதேஷ்டமாகத் திரட்டிக் கொண்டார்.

திருநாராயணனுக்கு ஒரு உத்ஸவ மூர்த்தி இல்லையே என்று உடையவர் ஏங்கினார். உடையவர் கனவில் மறுபடியும் திருநாராயணர் தோன்றி, ''என் உத்ஸவ விக்ரஹமான ராமப்ரியர் டில்லி பாதுஷாவின் அரண்மனையில் இருக்கிறார். அங்கு போய் அவரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வாரும்'' என்று நியமிக்க, மறுநாளே ஸ்ரீராமானுஜர் டில்லி நோக்கிப் பயணமானார்.

வெகு வேகமாக டில்லியை அடைந்தார். தாம் வந்திருக்கும் செய்தியை சுல்தானுக்கு சொல்லி அனுப்பினார். சுல்தானும் ராமானுஜரை அரண்மனைக்கு வரவழைத்தான். அவரது தெய்வீக தேஜஸினால் மிகவும் கவரப்பட்டு சுல்தான், ராமானுஜரிடம், என்ன வேண்டும் என்று விசாரித்தான். ராமானுஜர் உடனே, ''எங்கள் எம்பெருமான் ராமப்ரியர் உங்கள் ராஜக்ருஹத்தில் இருக்கிறார். அவரைத் தந்தருள வேண்டும்'' என்றார். அதற்கு சுல்தான், ''நாம் கொண்டு வந்திருக்கும் பல விக்ரஹங்களை காலையில் நீரே பார்த்து உமது பெருமாளைத் தேடி எடுத்துக் கொள்ளும்'' என்று கூறினான். தனது பணியாளை விக்ரகசாலையைத் திறந்து விடுமாறும் பணித்தான்.

மறுநாள் காலையில் சுல்தான் கொள்ளை அடித்து வந்திருந்த ஏராளமான விக்ரகங்கள் கொண்ட கிடங்கைப் பார்த்து ஸ்ரீராமானுஜர் பிரமித்துப் போனார். இருப்பினும், மிகுந்த அக்கரையுடன் அத்தனை விக்கிரகங்களையும் நாள் முழுவதும் சோதித்துப் பார்த்தும் ராமப்ரியரை அவரால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அன்றிரவு உபவாசத்துடன், ''எம்பெருமாள் ராமப்ரியர் எங்கிருக்கிறார்'' என்று ஏங்கி ஏங்கி கண்ணயர்ந்தார்.



இரவு கனவில், ராமப்ரியர் எழுந்தருளி ''ராமானுஜா! நான் இல்லாத இடத்தில் தேடி என்ன பயன்? நான் சுல்தானின் மகளின் அந்தப்புரத்தில் உள்ளேன்! அங்கு வா!'' என்று அருளிச் செய்தார். மறுநாள் விடியற்காலை ராமானுஜர் மிகுந்த உற்சாகத்துடன் எழுந்து நீராடி சுல்தானின் ஸபா மண்டபம் சென்றார். யாருக்கும் மசியாத சுல்தானும் ராமானுஜரிடம், ''பெரியவரே ! நீர் தேடிவந்த சிலை கிடைத்ததா'' என்று கேட்டான். மந்திரி காட்டிய கிடங்கிலுள்ள விக்ரகக் கும்பலில் ராமப்ரியர் இல்லை என்றார் ராமானுஜர். ''அப்படியானால் அவ்வளவு தான். நீர் போய் வாரும்'' என்று கூறினான் சுல்தான்.

''நவாப்! என் ஆண்டவன் உள்ள இடம் வேறு'' என்றார் உடையவர். ''எங்கிருந்தாலும் எடுத்துச் செல்லும்'' என்றான் சுல்தான். ''எம்பெருமான் தங்கள் செல்வியின் அந்தப்புரத்தில் இருக்கிறான். அங்கு செல்ல தங்கள் உத்தரவு வேண்டும். நீங்களும் உடன் வர வேண்டும் என்றார்'' ராமானுஜர்.

சுல்தான் அசந்து போய், ''என் பெண்ணின் அந்தப்புரத்தில் உமது பெருமாள் இருப்பது எப்படித் தெரியும்'' என்று கேட்டான். உடனே ராமானுஜர், ''நேற்று இரவு எனக்கு கனவில் பெருமாள் சொன்னார்'' என்றார். ''கனவா?'' என்று சிரித்த சுல்தான், வேடிக்கைதான் பார்ப்போமே என்று எண்ணி, ''சரி வாரும், அந்தப்புரம் செல்வோம்'' என்று கூறி, ராமானுஜருடன் தமது மகளின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றான்.

''உமது பெருமாள் இருந்தால் அழைத்துப்போம்'' என்றான் சிரித்துக் கொண்டே. அடுத்த விநாடியே அவன் சிரிப்பு உதடுகளில் உறைந்தது. எங்கோ ஜல்ஜல் என்ற ஓசை கேட்டது. ராமப்ரியன் அரசகுமாரியின் பஞ்சணையிலிருந்து இறங்கி அறைவாசலை நோக்கி நடந்து எப்படி வந்தான் தெரியுமா?

''இட்ட சட்டையும், கட்டின சிறு சதங்கையும், இட்ட கஸ்தூரித் திருநாமமும், முடித்த மைவண்ண நறுங்குஞ்சியும், தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்க, தன்னியலோசை சலன் சலனென்றிட செம்பொஞ்சதங்கைகள் கலகலவென்று ஒலிக்க, அகிலமும் காணும்படி நவாப் இட்ட ஆசனத்தில் அமர்ந்திருந்த உடையவரது மடியில் நடந்து வந்து ஏறி அமர்ந்தான்.

உடையவரும் ஆனந்தக்கண்ணீர் பெருக்கி, ''வாரும் என் செல்லப் பிள்ளையே'' என்று கூறி ராமப்ரியரை அணைத்துக்கொண்டார். நவாப்

அசந்து உறைந்து நின்றான். சிலை இப்படி நடந்து வரும் என்று அவனால் நம்பமுடியவில்லை. உடையவரின் ப்ரபாவத்தை உணர்ந்து, ராமப்ரியரை எடுத்துப்போக அனுமதித்தான்.

சுல்தானை வாழ்த்திவிட்டு உடனேயே ராமப்ரியருடன் அரண்மனையிலிருந்து வெளியே வந்து பெருமாளுடன் திருநாராயணபுரம் நோக்கி விரைந்தார். அந்தப்புரத்துக்கு திரும்பி வந்த ராஜகுமாரி தனது ராமப்ரியனைக் காணாமல் தேட, உடையவரிடம் அவரைத் தனது தந்தை கொடுத்துவிட்டதை அறிந்து குதிரைமேல் ஏறி வெகு வேகமாகப் பயணம் செய்து, ராமானுஜ கோஷ்டியை அடைந்தாள். ''ப்ரியனே! என்னைவிட்டு எப்படி நீ செல்வாய்'' என்று கதறினாள். பெருமாளிடத்தில் அவளுக்கு இருந்த அன்பைக் கண்ட உடையவர், நீயும் ராமப்ரியனுடன் வா, என்று அவளையும் பெருமாள் பல்லக்கில் உட்காரவைத்து அழைத்துச் சென்றார். திடீரென பல்லக்கு லேசாகிவிட்டதை உணர்ந்த பல்லக்குதூக்கிகள் ராமானுஜரிடம் தெரிவிக்க, ராமானுஜர் பல்லக்கு சீலையை விலக்கிப் பார்த்தார். உள்ளே அரசகுமாரியைக் காணவில்லை.

அரசகுமாரி ராமப்ரியனுடன் ஒன்றிவிட்டாள் என்று உணர்ந்த ராமானுஜர், பரவசமடைந்து, ''ஜாதி எதுவானால் என்ன, பத்துடை அடியவர்க்கு அவன் எளியவன் அல்லவா'' என்று நினைத்து உள்ளம் உருகி உருகி, ''தேவி உன்னைப் போல ஒரு விக்கிரகம் செய்து ராமப்ரியன் திருவடியிலேயே நீ வசிக்கும்படி செய்கிறேன்'' என்று கூறி திருநாராயண புரத்தை அடைந்ததும் ராமப்ரியரை ப்ரதிஷ்டை செய்து, நவாப் மகளைப் போலவே ஒரு விக்ரகம் செய்து பீபி நாச்சியாராக அவளையும் ப்ரதிஷ்டை செய்து ஸம்ப்ரோக்ஷணம் நடத்தி உற்சவங்களை விசேஷமாக நடத்தினார். இப்படி ஸேவை செய்து கொண்டும் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் செய்து கொண்டும் பன்னிரண்டு ஆண்டுகள் திருநாராயணபுரத்திலேயே கழித்தார். (தொடரும்)

---

**ஆன்மீக வாழ்க்கையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஸுக போகங்களிலும், சோம்பேறித் தனத்திலும் தங்கள் நேரத்தை செலவழிப்பார்களானால் அவர்கள் நரகத்தைதான் அடைவார்கள்.**

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

*Regd. Office :* ப்ரேமிக பவனம், 24, நேதாஜி நகர்,
ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரின் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா துவக்கப்பட்டு அதன் கிளைகள் டிசம்பர் '99 வரை ஏழு இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

ஸமீபத்தில் மேலும் இரண்டு கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த கேந்த்ரா கிளைகளில் தினமும் கீழ்கண்ட நேரப்படி நாமஸங்கீர்த்தனம்

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥**

நடைபெறுகின்றது.

| கிளை எண் | நாமசேகரர் பெயர் | முகவரி | தினமும் | ஞாயிற்றுக் கிழமை |
|---|---|---|---|---|
| 8. | ஸ்ரீ ஹரி<br>✆: 04354-21226 | நம்பர் : 10, ரெட்டி ராவ் குளம் (தெற்கு) கும்பகோணம் - 612 001 | காலை 7-8<br>மாலை 7-8 | காலை 7-9<br>மாலை 3-5 |
| 9. | ஸ்ரீ K. குமார் | C-69, விநாயகர் கோவில் தெரு, ஸ்வர்ணபுரி, சேலம் - 636 004 | காலை 7-8<br>மாலை 7-8 | காலை 7-9<br>மாலை 3-5 |

இந்த கேந்த்ரா கிளைகளில் நடைபெறும் நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபைக்கு பாத்திரமாகி ஸகல நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

# மஹாபாரதக் கதைகள்

## பதிவ்ரதா மஹாத்ம்யம்

பாண்டவர்களின் வனவாசத்தின் பொழுது யுதிஷ்டிரர், மார்க்கண்டேயரிடம், ''மஹாமுனிவரே!, எப்படி இந்த த்ருபதராஜகுமாரியைப் பற்றி (த்ரௌபதியைப் பற்றி) துயரப்படுகிறேனோ அப்படி என்னைப் பற்றியும், இந்தத் தம்பிமார்களைப் பற்றியும், கபடத்தால் என்னிடத்திலிருந்து கவரப்பட்ட ராஜ்யத்தைப் பற்றியும் நான் துயரப்படவில்லை. துராத்மாக்களான துரியோதனன் முதலியவர்களால் சூதாட்டத்தில் துன்பப்படுத்தப்பட்ட நாங்கள் க்ருஷ்ணையினால் கரையேற்றி விடப்பட்டோம். அவள், மறுபடியும் காட்டிலிருந்தும் ஜயத்ரதனால் வலிந்து கவரப்பட்டாள். மஹாபாக்யவதியும், பதிவ்ரதையுமான இந்த த்ருபதராஜகுமாரியைப் போன்ற ஓர் உத்தம ஸ்திரீயானவள் உம்மால் இதற்கு முன் அறியப்பட்டிருக்கிறாளா?'' என்று வினவினார்.

மார்க்கண்டேயர் அதற்கு, ''அரசனே! யுதிஷ்டிர! குலஸ்திரீகளுடைய இந்த மஹாபாக்யம் முழுமையும், ஸாவித்ரீ என்ற ராஜகன்னிகையினால் அடையப்பட்டவிதத்தைக் கேட்பாயாக. மத்ரதேசத்தில் தர்மாத்மாவும், பரமதார்மிகனும், ப்ராஹ்மணர்களுக்கு ஹிதத்தை செய்பவனும், மஹாத்மாவும் ஸத்தியஸந்தனும், இந்திரியங்களை ஜயித்தவனும், யாகம் செய்பவனும், தானங்கள் செய்பவனும், திறமை வாய்ந்தவனும், பட்டணத்து ஜனங்களுக்கும் காட்டு ஜனங்களுக்கும் ப்ரியமானவனும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்வதில் பற்றுள்ளவனுமான அஸ்வபதி என்ற ஒரு அரசன் இருந்தான்.

பொறுமையுள்ளவனும், உண்மையையே சொல்பவனும், இந்திரியங்களை அடக்கினவனுமான அந்த அரசன் குழந்தைகளில்லாமல் இருந்தான். வயது அதிகமானதினால் மனவருத்தத்தை அடைந்தான். ராஜஶ்ரேஷ்ட! அவன் புத்திரனை அடைவதற்காக மிதமான ஆகாரத்தை உட்கொள்பவனுமாயும், ப்ரஹ்மசர்யமுள்ளவனுமாயும், இந்திரியங்களை அடக்கியவனுமாயும், ஸாவித்ரீ மந்திரத்தினால் லக்ஷம் ஆகுதி செய்து (பகலை எட்டாகப் பகுத்து அதன்) ஆறாவது காலத்தில் மிதமாகப் புஜிப்பவனுமாயும் இருந்தான். இந்த நியமத்துடன் பதினெட்டு ஆண்டுகள் இருந்தான்.

பதினெட்டாவது வருஷம் நிறைந்தவுடன், ஸாவித்ரீதேவி ஸந்தோஷமடைந்து அந்த அரசனுக்கு காட்சியளித்தாள். வரத்தைக் கொடுப்பவளான அந்த ஸாவித்ரீயானவள், அக்னிஹோத்திரத்தினின்று எழுந்திருந்து அதிக ஸந்தோஷத்துடன் அந்த அஸ்வபதி ராஜனை பார்த்து, ''வேந்தே ! உன்னுடைய சுத்தமான ப்ரஹ்மச்சர்யத்தினாலும், அடக்கத்தாலும், நியமத்தாலும், பக்தியாலும், எல்லாவிதத்தாலும், உன் விஷயத்தில் ஸந்தோஷமுள்ளவளாக இருக்கிறேன். அஸ்வபதியே! மத்ரராஜனே! விரும்பிய வரங்களை பெற்றுக் கொள்வாயாக. தர்மங்களின் தவறுதலை நீ எவ்விதத்திலும் செய்யலாகாது'' என்று இந்த வசனத்தை உரைத்தாள்.அஸ்வபதி ஸாவித்ரீதேவியிடம், ''தர்மத்தை அடைய வேண்டும் என்கிற விருப்பத்தில், எனக்கு குழந்தை உண்டாவதற்காக இந்தக் காரியம் செய்யப்பட்டது. தேவி! குலத்தை விருத்தி பண்ணுவதற்கான அநேக புத்திரர்கள் எனக்கு உண்டாகவேண்டும். ப்ராஹ்மணர்கள் ஸந்தானத்தை சிறந்த தர்மமென்று எனக்குச் சொல்லி இருக்கின்றார்கள். என் விஷயத்தில் நீ மகிழ்ச்சி உள்ளவளாக இருந்தால், இந்த வரத்தை நான் விரும்புகிறேன்'' என்று சொன்னான்.

ஸாவித்ரீதேவி, அஸ்வபதியிடம், ''உன்னுடைய இந்த அபிப்ராயத்தை முன்பே அறிந்து, பகவானான ப்ரஹ்மதேவர் உனக்குப் புத்திரனைக் கொடுப்பதாக இருக்கிறார். இனிய குணம் வாய்ந்தவனே! உன்னிடத்தில் அவருக்குள்ள அருளினால் நான் ஸ்வயமே ஏற்பாடு செய்துவிட்டேன். நல்ல தேஜஸுள்ள ஒரு கன்னிகையானவள் சீக்கிரமே உண்டாவாள். இந்த விஷயத்தில் நீ எவ்விதத்திலும் எவ்விதமான உத்தரமும் சொல்லலாகாது. ப்ரஹ்மதேவருடைய கட்டளையினால் ஸந்தோஷமுள்ளவளாக உனக்கு இதனைச் சொல்லுகிறேன்'' என்று சொன்னாள். அந்த அரசன், ஸாவித்ரியின் வசனத்தை 'அப்படியே' என்று அங்கீகரித்து, மீண்டும் அவளைத் துதித்து அருள் புரியும்படி ப்ரார்த்தித்து, 'இது விரைவில் நடைபெறுக' என்று சொன்னான். ஸாவித்ரீ மறைந்தபின் அரசன் தன் பட்டணத்திற்குச் சென்றான்.

அந்த வீரன் பிரஜைகளைத் தர்மத்தில் பரிபாலனம் செய்துகொண்டு தன் ராஜ்யத்தில் வஸித்து வந்தான். சிறிது காலம் செல்லவே தவறாமல் விரதத்தை அனுஷ்டிப்பவனுமான அந்த அரசனின் மூத்த தர்மபத்னியும் மனுவின் புதல்வியுமான ராஜபுத்ரி, தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அந்த ராஜபுங்கவன் ஸந்தோஷம் உள்ளவனாக, அந்த பெண்ணுக்கு (ஜாதகர்ம முதலிய) கிரியைகளைச் செய்தான். ஸாவித்ரீ மந்திரத்தினால் ஹோமம் செய்யப்பட்டவளும், ப்ரீதி உள்ளவளுமான ஸாவித்ரீயினால் கொடுக்கப்பட்ட அந்த பெண்ணிற்கு ப்ராஹ்மணர்களும் பிதாவும் ஸாவித்ரீ என்றே பெயரிட்டார்கள்.

அந்த ராஜபுத்ரியானவள், லக்ஷ்மிதேவியே உருவெடுத்து வந்தது போல் வளர்ந்து வந்தாள். அந்தக் கன்னிகை வளர்ந்து பெரியவளானாள். அந்தப் பெண்ணை ஜனங்கள் பார்த்து, தேவகன்னிகையே இந்த பெண்ணின் உருவத்தில் வந்திருக்கிறாள் என்று எண்ணினார்கள். தாமரையிதழ் போன்ற கண்களை உடையவளும், காந்தியினால் ஜ்வலிக்கின்றவள் போன்றவளுமான அந்தக் கன்னிகையை (அவளுடைய காந்திக்கு இணை என்று ஒருவனும் தன்னை எண்ணாததால்) ஒருவனும் மனைவியாக வரிக்கவில்லை. அவள் தகுந்த காலத்தில் நீராடி உபவாஸம் இருந்து தேவதையை வந்தனம் பண்ணி விதிப்படி அக்னியின் ஹோமங்களை செய்து ப்ராஹ்மணர்களை வேதமந்த்ரங்களை சொல்லும்படி செய்து வந்தாள். பிறகு, தேவதைக்கு சூட்டி களைந்தவையான புஷ்பங்களைப் பெற்றுக்கொண்டு, உருவெடுத்த ஸ்ரீதேவியைப் போல், மஹாத்மாவான தனது பிதாவிடத்தில் ஸமர்ப்பித்து வந்தாள். பிதாவை வணங்கி அந்த நிர்மால்ய மலர்களை அரசனிடம் கொடுத்து, இரு கைகளையும் கூப்பி நிற்பாள். ஒருநாள், தேவகன்னிகை போன்ற தன் புத்ரி பெரியவளாக வளர்ந்தாலும், யாதொருவனாலும் வேண்டப்படாமல் இருத்தலைப் பார்த்து, அரசன் துக்கமுள்ளவனானான்.

அவன், ''பெண்ணே! உனக்கு இது கன்னிகாதான காலம். ஒருவனாவது என்னிடம் வந்து உன்னைக் கேட்கவில்லை. குணங்களால் உனக்குத் தகுந்த கணவனை நீயே வரிப்பாயாக. உன்னால் விரும்பப்பட்டவனை எனக்குத் தெரிவி. நான் நன்கு ஆராய்ந்து கொடுப்பேன். தர்மஶாஸ்த்ரங்களில் ப்ராஹ்மணர்களால் சொல்லப்படுவது என்னால் உனக்கு சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? கல்யாணி ! நீயும் தர்மஶாஸ்திரங்களின்படி சொல்லுகின்ற என்னுடைய வசனத்தைக் கேள். தகுந்த ஸமயத்தில் பெண்ணை தக்க வரனுக்கு கொடாத பிதாவானவன் இகழப்படத்தக்கவன். பிதா பரலோகம் போன பிறகு, தாயைக் காப்பாற்றாத புத்திரனும் இகழப்படத்தக்கவன். இந்த என்னுடைய வசனத்தைக் கேட்டு கணவனைத் தேடுவதில் நீ விரைவு செய். தேவதைகளால் நான் இகழப்படத்தகாதவனாகும்படி செய்'' என்று சொன்னான்.

பெண்ணையும், ப்ராயமுதிர்ந்த மந்திரிகளையும் பார்த்து, இவ்வண்ணமுரைத்து, ''ப்ரயாணத்துக்கு வேண்டிய வாகன முதலியவைகளும் உடன் செல்லவேண்டும்'' என்று கட்டளையிட்டான். பெரிய மனமுள்ள அந்த ஸாவித்ரியானவள் வெட்கமுள்ளவளாக பிதாவின் திருவடிகளை வணங்கி அவருடைய சொல்லை நன்கு அறிந்து, மேலும் ஆலோசியாமல் புறப்பட்டாள். அவள் பொன்னாலாகிய

தேரிலேறிக் கொண்டு, வயது முதிர்ந்தவர்களான மந்திரிகளால் சூழப்பட்டு, ராஜரிஷிகளுடைய அழகிய தபோவனத்தை அடைந்தாள். அங்கே பூஜ்யர்களான முதியவர்களுடைய பாதங்களில் வந்தனம் செய்துகொண்டு வரிசையாக எல்லா வனங்களையும் அடைந்தாள். ராஜபுத்திரியானவள் இவ்வண்ணம் எல்லாத் தீர்த்தங்களிலும் ப்ராஹ்மண ஶ்ரேஷ்டர்களுக்குப் பொருள்களை ஏராளமாகக் கொடுத்துக்கொண்டு பல இடங்களை தரிசித்து சென்று கொண்டிருந்தாள்.

மத்ரதேசாதிபனான அரசன், (ஒரு ஸமயம்) தேவரிஷியான நாரதருடன் சேர்ந்து, ஸபையின் நடுவில் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அச்சமயம், ஸாவித்ரீ எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிவிட்டு அப்படியே எல்லா ஆஶ்ரமங்களையும் அடைந்து மந்திரிகளோடு பிதாவின் வீட்டிற்குத் திரும்பி வந்தாள். அழகிய அந்த ஸாவித்ரியானவள், நாரதரோடு உட்கார்ந்து கொண்டிருக்கிற பிதாவைப் பார்த்து, இருவருக்குமே தனது சிரசினால் பாதங்களில் வந்தனம் பண்ணினாள். நாரதர், ''அரசனே! உன்னுடைய இந்தப் பெண் எங்கே போயிருந்தாள்? எவ்விடத்திலிருந்து வருகிறாள்? அப்பா! ஏன் இந்தப் பெண்ணை யாதொரு வரனுக்கும் கொடாதிருக்கிறாய்?'' என்று வினவ, அஸ்வபதியும், ''மஹரிஷியே! இந்தக் காரியமாகவே அனுப்பப்பட்டிருந்த என் பெண் இப்பொழுதுதான் வந்தாள். தாங்களே இவளிடமிருந்து இவளால் வரிக்கப்பட்ட பர்த்தாவைப் பற்றி கேளும்'' என்றான்.

'விஸ்தாரமாகச் சொல்' என்று பிதாவினால் ஏவப்பட்ட ஸாவித்ரீ, அவனுடைய வசனத்தை ஏற்று, அப்பொழுதே, ''ஸால்வ தேசத்தில் தர்மாத்மாவும் த்யுமத்ஸேனனென்கிற பெயருள்ளவருமான ஒரு க்ஷத்திரியர் பூமிக்கு அரசராயிருந்தார். ப்ரஸித்தியான அந்த த்யுமத்ஸேனர், பிறகு குருடரானார். புத்திமானான அவர், கண்களை இழந்து சிறுவரான ஒரு புத்திரருடனிருந்தமையால், அந்த ஸமயத்தில் அவருடைய ராஜ்யமானது ஸமீபத்தில் வஸிக்கின்ற பழைய பகைவனால் கவரப்பட்டது. அவர் சிறு குழந்தையுடனும் மனைவியுடனும் கானகம் சென்றார். பெரிய காட்டை அடைந்த த்யுமத்ஸேனர், பெரும் விரதத்துடன் தவம் புரிந்தார். அவருக்கு பட்டிணத்தில் பிறந்தவரும், தபோவனத்தில் வளர்ந்து வருகிறவருமான ஸத்யவானென்கிற பெயருள்ள புத்திரர் எனக்கு ஒத்த கணவராக மனதினால் வரிக்கப்பட்டார்'' என்று தெளிவாகக் கூறினாள். உடனே நாரதர், ''அரசனே! அந்தோ கஷ்டம்! ஸாவித்ரியினால் ஒரு பெரிய தவறு செய்யப்பட்டது. அறியாதவளான இந்தப் பெண்ணால், ஸத்யவான் குணசாலியாய் இருந்தமையால் கணவனாக வரிக்கப்பட்டான். இந்த ஸத்யவானுடைய பிதா ஸத்தியத்தை

சொல்லுகிறான். மாதாவும் ஸத்தியத்தை சொல்லுகிறாள். அதனால், ப்ராஹ்மணர்கள் இவனுக்கு ஸத்தியவான் என்கிற பெயரிட்டார்கள். இந்த சிறுவனுக்கு குதிரைகள் ப்ரியமானவை. இவன் மண்ணால் குதிரைகளைச் செய்கிறான். சித்திரத்திலும் குதிரைகளை எழுதுகிறான். அதனால் சித்திராஸ்வன் என்றும் சொல்லப்படுகிறான்'' என்று சொன்னார்.

அரசன், ''இப்பொழுது அந்த ராஜகுமாரன் தேஜஸ்வியாக இருக்கிறானா? சிறந்த புத்தி உள்ளவனா? பொறுமை உள்ளவனா? சூரனா? ஸத்தியவாதியா? பிதாவினிடத்தில் அன்பு உள்ளவனா? என்று வினவினான். நாரதர் அதற்கு, ''ஸத்யவான், சூரியனைப் போன்ற தேஜஸ் உள்ளவன். புத்தியில் ப்ருஹஸ்பதிக்கு ஒப்பானவன். மகேந்திரன் போன்ற வீரன். பூமி போலப் பொறுமை உள்ளவன்'' என்று சொன்னார். அஸ்வபதி, ''ராஜகுமாரன் கொடையாளியா? ப்ராஹ்மணர்களுக்கு நன்மையை செய்பவனா? ஸத்ய வாக்கியமுள்ளவனா? சிறந்த அழகுள்ளவனா? பெருந்தன்மை உள்ளவனா? இனிய தோற்றம் உள்ளவனா?'' என்று வினவினான்.

நாரதர் அதற்கு, ''பலசாலியான த்யுமத்ஸேனகுமாரன் தனது சக்திக்கு தகுந்தபடி கொடுப்பதில் ஸங்க்ருதிக்குப் புத்திரரான ரந்திதேவனுக்கு ஒப்பானவன். உசீநரகுமாரனான சிபியைப் போல் ப்ராஹ்மணர்களுக்கு நலத்தைச் செய்பவனும், உண்மை சொல்பவனும், யயாதியைப் போல பெருந்தன்மை உள்ளவனுமாவான். சந்திரன் போல் இனிய தோற்றம் உடையவன். ரூபத்தினால் அஸ்வினி தேவர்களை ஒத்தவன். அவன் பேசுந்திறமை உள்ளவன். அவன் தேஜஸ்வி. அவன் நல்ல புத்தி உள்ளவன். பொறுமை உள்ளவன். அவன் மனத்தை அடக்கினவன். அவன் ம்ருது ஸ்வபாவமுள்ளவன். அவன் சூரன். அவன் மெய்ம்மை உடையவன். இந்திரியங்களை அடக்கினவன். நல்ல நட்புடையவன். அவன், (குணமுள்ளவற்றிலும் குற்றத்தை ஏற்றுக் கூறுதலாகிய) அஸூயை இல்லாதவன். அவன் அகார்யத்தில் வெட்கமுள்ளவன். அவன் காந்தி உள்ளவன். தவத்தில் சிறந்தவர்களும், ஒழுக்கத்தில் சிறந்தவர்களும் சுருக்கமாக, எப்பொழுதும் அவனிடத்தில் உள்ளும், புறமும் ஒத்து இருத்தல் என்பது இருக்கிறது. தைர்யம் அவனிடத்திலேயே நிலைபெற்று இருக்கிறது'' என்று சொல்கின்றனர் என்றார்.


மறுபடி அஸ்வபதி, ''பகவானே! அந்த ஸத்யவானை தாங்கள் எல்லாவிதத்திலும் குணங்களோடு கூடினவன் என்றே சொல்லுகிறீர். அவனிடத்தில் ஏதேனும் தோஷங்கள் இருக்குமாயின், அவற்றையும் எனக்கு சொல்வீராக'' என்று வேண்டினான்.

நாரதர், ''அவனிடம் ஒரே ஒரு தோஷம் உள்ளது. அந்தத் தோஷம் எல்லாக் குணங்களையும் தாண்டி உள்ளது. முயற்சியினால் தாண்ட முடியாதது. அவனுக்கு அந்த தோஷம் தவிர வேறு இல்லை. அந்த ஸத்யவானின் ஆயுள் இன்று முதல் ஒரு வருஷத்துடன் முடிவடைகிறது'' என்று சொன்னார். அரசன் உடனே தன் பெண்ணை அழைத்து, ''ஸாவித்ரீ ! வா ! கல்யாணி ! வேறு வரனை அனுசரி. போ. நீ வரனாக வரித்துள்ள ஸத்யவானுடைய எல்லா குணங்களையும் மீறி அவனுக்கு ஒரு தோஷமுள்ளது. தேவர்களால் பூஜிக்கப்படும் நாரத பகவான், அற்ப ஆயுளுள்ள அந்த ஸத்யவான் ஓர் ஆண்டில் தேகத்தை இழப்பான் என்று சொல்கிறார்'' என்றான்.

ஸாவித்ரீ தந்தையிடம், ''தந்தை முதலியோரால் கிடைத்த பொருளை நியாயப்படி ஸகோதரர்கள் பங்கிட்டுக் கொள்வது ஒரு தடவை. கன்னிகை தந்தையால் தானமாக கொடுக்கப்படுவது ஒரு தடவை. பசு முதலியவற்றை தானம் செய்வதும் ஒரு தடவையே. இந்த மூன்றும் ஒரு தடவையே என்கிறார்கள். நீண்ட ஆயுளுள்ளவனோ, குணமுள்ளவனோ, குணம் இல்லாதவனோ என்னால் கணவன் என்பவன் ஒரு தடவை வரிக்கப்பட்டுவிட்டான். நான் இரண்டாமவனை வரிக்கமாட்டேன். மனத்தினால் நிச்சயம் செய்து, பிறகு வாக்கினால் சொல்லப்படுகிறது, பிறகு, சொன்னவண்ணம் அது செய்கையினால் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆகையினால் எனக்கு மனமானது ப்ரமாணம்'' என்றாள்.

நாரதர் அரசனிடம், ''புருஷ ஃப்ரேஷ்டனே! உன்னுடைய புத்திரியான ஸாவித்ரியின் புத்தியானது ஸ்திரமானது. இந்த தர்மத்திலிருந்து இவளை எவ்விதத்திலும் திருப்பப்படமுடியாதவள். ஸத்தியவானிடம் உள்ள குணங்கள் வேறு மனிதனிடத்தில் இல்லை. ஆகையால் இவளை ஸத்தியவானுக்குக் கொடுப்பதே எனக்கு ஸந்தோஷம்'' என்று சொன்னார். அரசனும், ''இவளுடைய புத்தி அசைக்கப்படமுடியாது என்று தேவரீரால் உரைக்கப்பட்டது. தேவரீருடைய வசனம் உண்மை. இதனை அப்படியே செய்வேன். பகவானான தேவரீர் எனக்கு குருவன்றோ? என்று சொன்னான். நாரதர், ''உன் பெண்ணான ஸாவித்ரியை ஸத்யவானுக்கு கொடுப்பதில் தடை வேண்டாம். நான் சொல்வேன். உங்களனைவருக்கும் மங்களம் உண்டாகுக!'' என்று சொன்னார். இவ்வண்ணம் கூறி நாரதர் ஆகாயத்தில் எழும்பி ஸ்வர்க்கத்திற்குச் சென்றார். அரசனும் புத்திரியின் விவாஹ மங்களத்தை சித்தம் செய்தான்.

(தொடரும்)



# பாலகர்களுக்கு ஒரு கதை - 27

ஒரு ஸமயம், ஒரு கிராமம் ஒன்றில், தனபாலன் என்பவன் வசித்து வந்தான். அந்த கிராமத்தில் வாழ்ந்து வந்த அத்தனை மக்களும் நல்லவர்கள். மிகவும் நேர்மையான முறையில் வாழ்க்கை நடத்துபவர்கள். ஆனால் தனபாலன் மட்டும் எப்பொழுதும் யாரையாவது வம்புக்கு இழுத்து தகராறு செய்துவருவான். ஆகவே, மக்கள் அவனைக் கண்டு பயந்தனர். அவனுடன் யாரும் அதிகம் கலந்து பழகுவதில்லை.

இப்படியிருக்கையில், அந்த கிராமத்தில் வேங்கடேசன் என்ற ஒரு ஸாது வஸித்து வந்தான். ஒருநாள் திடீர் என்று தனபாலன் வேங்கடேசனைப் பார்த்து, ''நீ என்னிடம் இருந்து ரூபாய் பத்தாயிரம் கடன் வாங்கியுள்ளாய். அதை உடனே திருப்பித்தர வேண்டும்'' என்றான். அதைக் கேட்ட வேங்கடேசனோ மிகவும் பயந்து, நான் உன்னிடமிருந்து எந்தக் கடனும் வாங்கவில்லையே! அப்படியிருக்கையில் நான் கடன் வாங்கியதாக எப்படிச் சொல்கின்றாய்? என்று கேட்டார். அதற்கு தனபாலன், ''ஒரு மாதம் முன்பாக என் கனவில் வந்து நீ கடன் கேட்டாய். உடனே நானும் உனக்கு ரூபாய் பத்தாயிரம் கனவில் கடன் கொடுத்துள்ளேன்'' என்றான்.

வேங்கடேசன் என்ன செய்வது என்று அறியாமல் பஞ்சாயத்துக்காரர்களிடம் தன் நிலைமையை எடுத்துக் கூறினான். அந்த பஞ்சாயத்து தலைவர் மிகவும் கெட்டிக்காரர். அவர் வேங்கடேசனைப் பார்த்து, ''கவலைப்பட வேண்டாம்'' என்று கூறி, ஓரிரு நாட்களில் பஞ்சாயத்தைக் கூட்டினார். ஊரில் உள்ள எல்லோரும் அந்த பஞ்சாயத்தில் கலந்து கொண்டனர். பஞ்சாயத்து தலைவரோ ஒரு பெரிய கண்ணாடியை எடுத்து வரச் சொல்லி அதை அந்த ஸபையில் வைத்தார். பிறகு 10,000 ரூபாயை அந்த நிலைக்கண்ணாடி முன்பு வைத்தார். தனபாலனை அழைத்து, ''வேங்கடேசன் உன்னிடம் கனவில்தான் கடன் வாங்கினான். நேரில் வாங்கவில்லை. ஆகவே நீயும் அந்தக் கண்ணாடியில் தெரியும் 10,000 ரூபாயை எடுத்துக் கொள்'' என்று கூறினார். தனபாலனோ செய்வதறியாமல் தவித்து, தலை குனிந்து நின்றான். வேங்கடேசனுக்கு மிகுந்த நிம்மதி உண்டாயிற்று. கிராமத்து ஜனங்களும் வெகுவாக அந்த தீர்ப்பை பாராட்டினார்கள். உலகில் என்றும் வல்லவனுக்கு வல்லவன் உண்டு என்பதை இந்த கதை உணர்த்துகின்றது. ■

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 54

*சாப்பாடுன்னை சார்ந்துணவாயன் சாந்தமாய்*
*போவன் அருணாசலா*

மனிதர்களுக்கு பசி வருகிறது. இந்தப் பசி வந்துவிட்டால் சாப்பாடுதான் முக்கியமாய் படுகிறது. சாப்பாடு கிடைக்காவிடில் துன்பமாக இருக்கிறது. இதற்கு நேர்மாறாக, பசுமாடானது இருக்கிறது. அதற்கு, மடியில் பால் நிரம்பி விட்டால், அதன் வழியில் போவோர்களை எல்லாம் கூப்பிடும். யாராவது அந்த பாலைக் கறக்கமாட்டார்களா என ஏங்கும். பாலைக் கறந்தால்தான் பசுவிற்கு நிம்மதி.

பசுமாட்டிற்கு பால் கறக்கவேண்டும் என்ற தினவு ஏற்படுவது போலவே இறைவனுக்கும் ஒரு தினவு இருக்கிறது. எந்த பக்தனுக்காவது அருளைப் பொழியமாட்டோமா என்று. பக்தர்களுக்கும், மஹாத்மாக்களுக்கும் ஒரு பசி ஏற்படுகிறது. அவர்களுக்கு ஏற்படுவது அருட்பசி. இறையருளுக்காக அவர்கள் ஏங்குகிறார்கள். உடற்பசிக்கு எவ்வாறு சாப்பாடுதான் மருந்தாக முடியுமோ, அதுபோல் பக்தர்களின் அருட்பசியை இறையருளால்தான் போக்கமுடியும். பக்தன் இறைவனுக்காக ஏங்குகிறான். இறைவனும் பக்தனுக்காக ஏங்குகிறான். இறைவன் தன்னுடைய கிருபையை யார் மேலாவது பொழியமாட்டோமா என்று உள்ளான். அதற்கு தகுந்த பாத்திரம் கிடைத்தால் போதும். கொட்டிவிடுகின்றான்.

இந்த பக்தனின் தாபத்தை இறைவனால்தான் புரிந்துகொள்ள முடியும். ஏனையோரால் புரிந்துகொள்ளமுடியாது. பக்தனையும், இறைவனையும் சேர்த்துவைக்கக் கூடியவர் இருவரின் மனத்தையும் புரிந்து கொண்டவராக இருக்கவேண்டும். அது ஒரு உத்தம ஸத்குருவினால்தான் ஆகும். குருநாதரிடம் ஒரு சீடன் வந்து, பகவானை பார்க்கவேண்டும், ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடையவேண்டும் என்று கேட்பானேயாகில் அவனிடம் இதுவெல்லாம் அடையமுடியாத விஷயம். இது உனக்கு வேண்டாம் என சொல்பவர் ஸத்குரு ஆகமாட்டார். மோசமான பாவியைக் கூட மோக்ஷத்தில் கொண்டு சேர்க்கக்கூடியவரே ஸத்குரு.

தேசிகன் ஒரு க்ரந்தத்தில், ''பகவானை அடையமாட்டோமா எனும் ஜீவனின் தாபத்தையும், அந்த ஜீவன் தன்னிடம் வரமாட்டானா எனும் இறைவனின் ஆசையையும் புரிந்துகொண்டவரே ஸத்குரு'' என்று கூறியிருக்கிறார். இப்படியே சொல்லி வந்தவர், அப்பேர்ப்பட்டவர் ஹனுமாரைப் போல் இருக்கவேண்டும் என்று முடித்துவிட்டார். ஹனுமாரை ஏன் சொல்ல வேண்டும் என்றால், ஸ்ரீமத் ராமாயணத்தில், விபீஷண ஶரணாகதி கட்டத்தில் ஹனுமாரின் குணம் தெரியவருகிறது.

ராவணனுக்கு நற்புத்தி நன்கு எடுத்துச் சொல்லியும், அவன் கேட்கமாட்டான் என்று தெரிந்த பின், விபீஷணன் இலங்கையை விட்டு கிளம்பி ராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அவ்வாறு விபீஷணன் வந்து சேர்ந்தபொழுது, வானரர்களுக்குள் மிகுந்த சர்ச்சை கிளம்பியது. ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடம் விபீஷணன் வந்துள்ள விஷயத்தை எடுத்துச் சொன்ன பின், அவர் அங்கிருந்த முக்கிய வானரர்களிடம் அபிப்ராயத்தை கேட்கிறார்.

உடன் அங்கதன், ''கபட புத்தி உள்ளவர்கள் வெளியில் சிநேகமாகவும் உள்ளே ஸத்துரு மனப்பான்மையும் கொண்டவர்களாக இருப்பர். ஆகையால் இவனை பரிக்ஷித்து ஏற்றுக்கொள்ளவேணும்'' என்றான். ஸாம்பன், ஜாம்பவான், மைந்தன் போன்ற வானரர்களும், ராவணன் மஹாகுரூரன். அவன் ஸஹோதரனான இவனும் அப்படியே இருப்பான். மேலும் இந்த வேளையில் இவன் நம்மை ஶரணமடைவதில் உள்நோக்கம் இருக்கும். இவனை ஸந்தேகப்படுவதில் நியாயம் உள்ளது. இவனை சேர்க்காதிருத்தலே நலம் என பலவிதமாய் அபிப்ராயம் சொல்கின்றனர்.

ஆரம்பத்திலேயே ஸுக்ரீவன், ஆபத்து வேளையிலே தமையனுக்கு துரோகம் செய்துவிட்டு வந்து இருக்கும் இந்த ராக்ஷஸன் நமக்கு எந்த ஹானி வேண்டுமானாலும் செய்வான். ஆகையால், இவனைக் கொன்றுவிடுதலே தகும் என்று தனது அபிப்ராயத்தை சொல்லிவிட்டான். ராமர் கடைசியாக ஹனுமாரிடம் அபிப்ராயத்தை கேட்டார். நீதி ஶாஸ்த்திரங்கள் நன்கு அறிந்தவரும், சூக்ஷ்ம புத்தி கொண்டவரும், புத்திமானுமான ஹனுமான் சொன்ன அபிப்ராயம் மிகவும் ஏற்றதாய் இருந்தது. அதுவரையில் அனைவரும் சொல்லி வந்த அபிப்ராயங்கள் அனைத்தையும் கேட்ட விபீஷணன் துன்பத்தை அடைந்தான். நாம் ராமரிடம் சேருவதற்காக மிகுந்த ஆசை கொண்டு உள்ளோம். இதை

யாரும் உணர்ந்ததாய் தெரியவில்லை. நம்பக்கம் யாராவது பிரபுவிடம் எடுத்துச் சொல்வாரோ என்று பலவிதமாய் வருந்துகிறான்.

ராமரோ விபீஷணனின் தாபத்தை அறிந்தவர். மேலும் அவருக்கு, விபீஷணனை சேர்த்துக்கொள்ளச் சொல்லி யாராவது சொல்லமாட்டார்களா என காத்துக் கொண்டிருக்கிறார். அதுவரையிலும், எவரும் சொல்லாது போயினர். ராமரும் இதுகண்டு வருத்தமடைந்தார். இந்த இறைவனாகிய ராமரின் ஆசையையும், பக்தனாகிய விபீஷணனின் தாபத்தையும் நன்கு அறிந்தவராயிருந்தார் ஹனுமார். அதுவே ஸத்குருவின் லக்ஷணம். அவர் மேற்கொண்டு தகுந்த காரணங்களையும், மேற்கோள்களையும் காட்டி, விபீஷணனை சேர்த்துக் கொள்வதே சரி என்று ராமரிடம் எடுத்துரைத்து இருவரின் துன்பத்தையும் போக்குகிறார்.

சரி. இது இருக்கட்டும். விபீஷணனின் பின்னால் ஒரு பட்டாளமும் வந்து இருந்தது. விபீஷணனை சேர்த்துக் கொள்ளலாமா, வேண்டாமா என மேற்கண்ட சர்ச்சை எழுந்தது. ஆனால், விபீஷணனை சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுத்த பின்னர், அவன் பின்னால் வந்தவர்கள் அனைவரும் கேள்வியின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதில் என்ன ஸூக்ஷ்மம் என்றால், குரு மோக்ஷம் சென்றால், அவர் பின்னால் வரும் அனைத்து ஜீவன்களுக்கும் தடையின்றி மோக்ஷம் கிட்டும் என்பது தான்.

'சாப்பாடு உன்னை சார்ந்து உணவாயன்' - பகவான் ரமண மஹரிஷிகளுக்கு அருட்பசி வந்தது. அந்த அருட்பசியை போக்கிக் கொள்வதற்காக அவர் அருணாசலேஶ்வரரை வந்தடைந்தார். அருணாசலேஶ்வரரும் இவர்மேல் ப்ரீதியுடன் அருள்மழை பொழிய, இவருடைய ஞானப்பசி அகன்றது.

'சாப்பாடு உன்னை' - ''அருணாசலா! உன்னிடம் சாப்பாட்டிற்காக, எனது பசியை போக்கிக் கொள்வதற்காக வந்தேன். எனது பசியை நீ போக்கியது மட்டுமல்லாமல், என்னையே நீ சாப்பிட்டும் விட்டாய். என்னையே நீ சாப்பிட்டு விட்டாய் என்றால், எனது ஜீவபேதத்தையே அழித்து விட்டாய்'' என்கிறார்.

'சாந்தமாய் போவன் அருணாசலா' - உலகில் அனைவரும் ஜபம், தியானம் செய்தால் சக்தி வரும் என்று எதிர்பார்க்கின்றனர். அப்படி வரும் சக்தி, இருப்பது போல் இருந்து அகன்று விடும். அந்த சக்தி உண்மையான சக்தி ஆகாது. ஏனெனில், இவை அனைத்தும் possessed ஆகும்.

உண்மையான சக்தி ஆன்மசக்திதான். இந்த சக்தி, முழுமையான சாந்தம் வரும் பொழுதுதான் வரும். ஆத்மசக்திக்கு மேல் உயர்ந்த சக்தி இல்லை. மனது என்று ஒன்று இருக்கும்வரை சாந்தம் வரவே வராது. மனது உள்ளவரை ஸஞ்சலமானது இருக்கும். அதுவரை விருப்பு, வெறுப்பு, ஆசாபாசங்கள் இருந்து, துன்பத்தைக் கொடுத்து, சாந்தியை கெடுத்தே தீரும். மனது அழிந்தால், சாந்தி ஏற்படும். அந்த சாந்திக்கு அழிவு இல்லை.

''சாந்தமாய் போவன்'' - அருணாசலா, உனக்கு என்னை விட பெரிய பசி இருந்திருக்கிறது போல் உள்ளது. ஏனெனில், பசியோடு வந்த என்னையே, என் பசியையும் சேர்த்து விழுங்கிவிட்டாய். இதற்கு காரணமும் இருக்கிறது. என்னவெனில், என்னைப் போன்ற ஒரு உத்தமமான பக்தன் உன்னிடம் வந்து வெகுநாளாகிவிட்டது. அதனால்தான் அவ்வாறு வந்த என்னை விழுங்கிவிட்டாய். அதனால் எனக்கு என்ன ஆயிற்று என்றால், பெரிய சாந்தி, அமைதி வந்து விட்டது என்கிறார்.

(தொடரும்)

---

- **பல கோடி ஜன்மாக்களுக்குப் பிறகுதான் உத்தமமான ஒரு ஞானியின் தரிசனம் ஏற்படுகிறது.**
- **கடவுள் மீது உள்ள எல்லையில்லா அன்பிற்குத்தான் பக்தி என்று பெயர்.**
- **விரட்ட விரட்ட எறும்புகள், இனிப்புப் பண்டங்களை நோக்கி வந்து கொண்டேயிருக்கும். சுற்றி மருந்து போட்டால் எறும்பு உள்ளே வரமுடியாமல் நின்றுவிடும், அதுபோல், நம் உள்ளத்தில் காமம், கோபம், பயம் எல்லாம் வந்து கொண்டேயிருக்கும். இவைகளை வரவிடாமல் தடுக்க நம் ஸாமர்த்தியத்தினால் முடியாது. ஆனால், ''பகவந்நாமாவை'' ஸதா ஜபம் செய்து வந்தால் இவைகளை உள்ளே வரவிடாமல் தடுத்துவிடும், ''பகவந்நாமா'' தான் நமக்கு எப்பொழுதும், எங்கும் கதி**

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# செய்திகள்

### ஜனவரி 4, 5, 6 தேதிகள்

மும்பை, மாதுங்கா The South Indian Bajan Samaj-ல் நடைபெறும் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண வித்வத் ஸதஸில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### டிசம்பர் 31-ந் தேதி முதல் ஜனவரி 15-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள், மும்பை, மாதுங்காவில் The South Indian Bajan Samajல் ''திருப்பாவை'' உபந்யாஸம் செய்தார்கள்.

### ஜனவரி 16-ந் தேதி ஜனவரி 20-ந் தேதி வரை

மும்பை, ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸமாஜ் (ரிஜிஸ்ட்), கோவில் வளாகம், செட்டா நகர், செம்பூர் சார்பில் ஸ்ரீ ஸ்வாமிகள், 'பக்த விஜயம்' உபந்யாஸம் செய்தார்கள்.

### ஜனவரி 29, 30 தேதிகள்

பெங்களூர், மல்லேஸ்வரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ராதா கல்யாண மஹோத்ஸவம் நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### பிப்ரவரி 29, 1, 2 தேதிகள்

சென்னை மேலமாம்பலம் ஸ்ரீ அயோத்யா அஸ்வமேத மஹா மண்டபத்தில் மஹாசிவராத்ரியை முன்னிட்டு ஸ்ரீ வைதீக பரிபாலன ஸபா ஸார்பில் நம் ஸ்வாமிகள் மாலை 4 முதல் 6 மணி வரையிலும் இரவு 7 மணி முதல் 9 மணி வரையிலும் பக்தவிஜயம் பற்றி உபன்யாசம் செய்கிறார்கள்.

# நாமஸங்கீர்த்தனம்

தர்மங்களெல்லாம் நலிந்துவிட்ட கலிகாலத்தில், **''கலௌ கல்மஷ சித்தானாம்''** என்று சொன்னதுபோல் மனத்தூய்மையின்மை, பொருளீட்டுதலில் தூய்மையின்மை முதலியவற்றுடன் கூடிய வாழ்க்கை, விதிக்கேற்ப எந்த ஒரு சடங்கையும் செய்ய முடியாத நிலைமை என்று நமக்கு இருப்பதால் இந்த காலத்திற்கு நாம ஜபமே ஏற்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாமஜபம் ஏதோ மற்ற ஸாதனைகளைவிட தாழ்ந்ததல்ல என்பதையே **''த்யாயன் க்ருதே...''** என்று க்ருத யுகத்தில் த்யானத்தினாலும் த்ரேதா யுகத்தில் யாக யஜ்ஞாதிகளாலும், த்வாபர யுகத்தில் அர்ச்சனையினாலும் எந்த ஒரு உயர்ந்த வஸ்துவை அடைந்தார்களோ அதே வஸ்துவை கலியில் நாமஸங்கீர்த்தனத்தினால் அடையலாம் என்று திட்டவட்டமாக கூறப்பட்டிருக்கிறது. பொதுவாகவே, நான்கு யுகங்களிலும் நாமஸங்கீர்த்தனம் இருக்கிறதென்றாலும், கலியுகத்தில் இது விசேஷமாக கூறப்படுகிறது. ஒரே நாமாவை வெகுநேரம் சொல்வதில் சலிப்பு தட்டாமலிருக்க சற்று ராக தாளங்களுடன் இரண்டு மூன்று நாமாக்களை சேர்த்து நாமாவளியாகவும் ஸங்கீர்த்தனம் செய்யும் பத்ததி ஏற்பட்டது. வேதத்திலேயே நாமஸங்கீர்த்தனத்திற்காக கொடுத்துள்ள மந்த்ரம்

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''**

என்பது. இது மூன்று நாமாக்களை (ராம, க்ருஷ்ண, ஹரி) குறிக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு உபதேசித்ததும் இந்த மந்த்ரத்தைதான்.

காஞ்சி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ராம நாமஸித்தாந்தம் செய்துள்ளார்கள். ஒரு நாமா எத்தனை பாபத்தை போக்கும் என்றால் அதற்கு பதில் என்ன தெரியுமா? ''ஒரு நாமாவால் போக்கக்கூடிய அளவு பாபத்தை, நீ பாபமேதான் செய்வேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்தாலும் உன்னால் செய்யமுடியாது'' என்கிறார். இலக்கை நோக்கி கிளம்பிய அம்புபோல் இந்த நாமா, பகவானை நமக்கு காட்டித் தரும்வரை நில்லாது. பாபம்மட்டும் போய் என்ன பயன்? நமக்கு பாபம் செய்யும் எண்ணமே எழாமல் நம்மை மாற்றி பரிசுத்தமாக்கும் தன்மையுடையது நாம ஜபம். சூரிய ஒளி எல்லா இடத்திலும் வெப்பத்தைக் கொடுக்குமாயினும், லென்ஸ் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்டால் சுட்டெரிக்கும் சக்தி அதற்கு இருப்பதுபோல், ஏக நாம ஜபம் செய்தால் ஒரு முகப்படும்

மனப்பக்குவமும் அதன் மூலம் பகவானை அடையும் பாக்யமும் நமக்குக் கிடைக்கும். இப்படிப்பட்ட ப்ரபாவமுடைய நாமா ஒவ்வோர் ஜீவனின் நாவிலும் எப்பொழுதும் தாண்டவமாட வேண்டும் என்பதுதான் மஹான்களின் விருப்பம். புராண ரத்னமாகிய ஸ்ரீமத் பாகவதத்திலும் நாம மஹிமையே ப்ரதானமாக கூறப்படுகிறது. பாகவதம் என்றாலே ஸ்ரீ க்ருஷ்ண சரித்ரம்தான்.

**''ஏகம் ஶாஸ்த்ரம் தேவகீபுத்ர கீதம் ஏகோ தேவோ தேவகீபுத்ர ஏவ ஏகோ மந்த்ரஸ்தஸ்ய நாமானி யானி கர்மாப்யேகம் தஸ்ய தேவஸ்ய ஸேவா''**

என்பதுபோல் பாகவத ஆரம்பத்தில், நாம மஹிமை கேட்டு மோக்ஷமடைய விருப்பமுற்றான் பரீக்ஷித். பாகவதம் முழுவதும் எங்கு பார்த்தாலும் ஸாதுஜனமஹாதம்யம். அவர்கள் உபதேசமோ நாமஜபம்தான். கடைசி ஶ்லோகமோ

**''நாம ஸங்கீர்த்தனம் யஸ்ய ஸர்வபாப ப்ரணாஶனம்**
**ப்ரணாமோ துக்கஶமன: தம் நமாமி ஹரிம் பரம்''**

என்று ஹரி பஜனத்தை சொல்கிறது. வெளிப்படையாக பாகவத தர்மம் என்பது, காலையில் பகவானை எழுப்பும், ப்ரபோதனம் முதல் திருமஞ்ஜனம், நாமஸங்கீர்த்தனம், பஜனை மற்றும் டோலோத்ஸவம் என்னும் பகவானை ஊஞ்சலாட்டி தூங்கச்செய்வது வரை நம்மில் ஒருவனாக பகவானுக்கு எல்லா உபசாரமும் செய்வதாகும். உள்முகமாக இவைகள் ஞான பக்தி, வைராக்யங்களைக் கொடுக்கும். மற்ற ஸாதனைகளோவென்றால் விதிப்படி ஒரு தவறுமில்லாமல் ஸாதனை செய்தபின் பலனை கொடுக்கும். விதிப்படி என்று சொல்லும்பொழுதே இது தற்போதைய சூழ்நிலையில், எவ்வளவு கடினம் என்பது புரியும். நாம ஜபமோ செய்யும்பொழுதே ஒரு வித புளகாங்கிதத்தையும், ஆனந்தத்தையும் கொடுத்து, ''அடையவேண்டிய பொருள் பற்றி நமக்கென்ன கவலை? அது வரும்பொழுது வரட்டும், அது அவன் இஷ்டம், இப்பொழுது ஆனந்தமாகத்தானே இருக்கிறது'' என்று நினைக்க வைக்கும். இந்த நாம ருசியை நமக்கு ஊட்டுவதற்காகவே நம் குருநாதர் பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் பல இடங்களிலும் நாமம் ஒலிக்க வேண்டும் என்று ஆஜ்ஞாபித்திருக்கிறார்கள். இது தற்பொழுது பல இடங்களிலும் நடந்து வருகிறது. பல ஊர்களிலும், சென்னையிலேயே பல இடங்களிலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் அருகிலிருப்பவர்கள் கலந்துகொள்ள வசதியாக நடந்துவருகிறது.அகண்ட நாமஸங்கீர்த்தனமாக 5.3.2000 முதல் 11.3.2000 வரை ரஸிக ரஞ்சனி ஸபாவில் (R.R. Sabha) மயிலாப்பூர், சென்னை - 600004ல் நடைபெற இருக்கிறது.

ஸ்ரீ ஹரி:

**பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்**

# *சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா*

ப்ரேமிக பவனம், 24, நேதாஜி நகர்,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

கலேர் தோஷநிதே ராஜன் அஸ்தி ஹ்யேகோ மஹான் குண:
கீர்த்தநாதேவ க்ருஷ்ணஸ்ய முக்த ஸங்க: பரம் வ்ரஜேத்

## *பகவந்நாம ஸங்கீர்த்தன மேளா*
## *(நாம ஸப்தாஹம்)*

நிகழும் ப்ரமாதி வருஷம், மாசி மாதம், 22-ந் தேதி முதல் மாசி 28-ந் தேதி வரை (05-03-2000 முதல் 11-03-2000 வரை) சென்னை, மயிலாப்பூர், ரஸிக ரஞ்சனி ஸபாவில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''**

அகண்ட நாமஸங்கீர்த்தனம், பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் முன்னிலையில் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபையால் நடத்த உத்தேஸிக்கப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனம்தான் அனைவருக்கும் கதியாக இருப்பதால் இதில் அனைவரும் கலந்துகொண்டு ஸர்வ நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### *நிகழ்ச்சி நிரல்*

**தேதி : 05-03-2000 முதல் 11.03-2000 வரை**

**தினமும் :**

காலை 6 மணி முதல் : **நாம ஸங்கீர்த்தனம்**
மாலை 6 மணிவரை

இரவு 7 மணி முதல் : **பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்**
இரவு 9 மணி வரை **பக்த விஜயம் - உபந்யாஸம்**

**11-03-2000 அன்று இரவு 9 மணி முதல் இரவு 11 மணி வரை**

**திவ்யநாம ஸங்கீர்த்தனம்**


**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India Regd. No. TN/Chief PMG - 156/2000
R. No. 62828/95 Licensed to post without prepayment WPP No. 52

| வேணு : 5 | பிப்ரவரி 2000 | கானம் : 7 |
|---|---|---|


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar